Scanned by CamScanner

# யானைக் கூட்டம்!

தென் இந்தியாவில் யானைகளுக்கு பாதுகாப்பான இடம் முதுமலையைச் சுற்றியுள்ள அடர்ந்த காடுகள்தான். ஆனால் இப்போது அந்த இடம்கூட யானைக்கு நிரந்தரம் இல்லை. காரணம்– அந்தக் காட்டில் உள்ள மரங்கள் வெட்டப்படுகின்றன. காடுகளை பண்ணை நிலங்களும், கிராமங்களும் பின்னிப் பிணைந்துவிட்டன. அந்த நிலத்தில் விவசாயம் செய்யும்பொழுது உழவர்கள் அங்கு தங்கிக்கொள்ள குடிசைகள் கட்டிக்கொள்கிறார்கள் அங்கே வரும் யானைகளை விரட்ட அவர்கள் பட்டாசு கொளுத்தியும், டார்ச் விளக்கினாலும், ஒலிபெருக்கியை பயன்படுத்தி யானையை விரட்டுகிறார்கள்.

முதுமலையில், ஆசிய இனத்தைச் சேர்ந்த யானைகள் நிறைய இருக்கின்றன. ஆனால் இவைகள் நிரந்தரமான இடவசதி இல்லாததினால் நாளுக்கு நாள் யானைகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வருகிறது.

ஏறக்குறைய இந்தியாவில் 25 ஆயிரம் யானைகளும், பர்மாவில் 10 ஆயிரம் யானைகளும் காணப்படுகிறது.

பெண் யானைகளும் யானைக் குட்டிகளும் கூட்டமாக மேய்வதால் அதிகமான அளவில் பயிர்களை நாசப்படுத்துகின்றன.

Scanned by CamScanner

ஆண் யானைகள் மட்டும தனிமையில் வசதியாக மேய் கின்றன. இளநீருக்காக யானை கள் தென்னை மரங்களை சாய்க் கின்றன. பெரிய மரங்களையும் வேரோடு பிடுங்கி எறிகின்றன. மாமரமும், மக்காசோளமும் பூத்துவிட்டால் யானை அவை களை விட்டுவைப்பதில்லை. வாழை மரத்தையும் குறிவைக் கின்றன.

ஒரு ஆண் யானை இரவில் 75 கிலோ தானியத்தைச் சாப்பிடு கிறது. 60 சதவீத தானியத்தைப் நாசப்படுத்துகிறது. அதே யானை 15 முதிர்ந்த தென்னை மரங்களை அழிக்கின்றது. மேலும் யானை கள் மரப்பட்டைகளை விரும்பி அதிக அளவில் தின்கின்றன.

யானைகளுக்கு தினமும் தண்ணீர் தேவைப்படுவதில்லை. தண்ணீர் இல்லாமல் யானை களால் பலநாள் இருக்க முடியும். பெரிய யானைகள் ஒரு நாளைக்கு 100 லிட்டர் முதல் 225 லிட்டர் வரை தண்ணீரை குடித்து சேமித்து வைத்துக் கொள்கிறது.

ஆண் யானைகள் 5 வயது ஆனவுடன் தாய் யானையிடம் இருந்து விடுபட்டு மற்ற கூட்டத் துடன் சேர்ந்து கொள்ளுகிறது.

யானைகள் பெரும்பாலும் மரத்தொழிற்சாலைகளில் மரங் களை இழுக்கப் பயன்படுத்தப் படுகின்றன. மரங்களை இழுக்க ஆண் யானைகளைவிட பெண் யானைகள்தான் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. ஏன் என்றால் ஆண் யானைகளை பழக்குவதைவிட பெண் யானை களை எளிதில் பழக்கிவிடலாம்.

# நச்சு எறும்புகள்

அமெரிக்காவில் நெருப்பு எறும்பு என்று ஒருவகை எறும்பு உள்ளது. நச்சுத் தன்மையுடைய இந்த எறும்புகள் தாவரங்களைக் கூட அழித்து விடுமாம். இந்த எறும்புகள் பூச்சி மருந்து தெளித் தாலும் அழிக்க முடிவதில்லை. எனவே இதை ஒழிக்க புதுவித யுக்தியை டெக்சாஸ் பல்கலைக் கழக விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

அதாவது பிரேசில் நாட்டில் உள்ள ஒருவகை ஈயை கொண்டு வந்து இந்த நெருப்பு எறும்பை அழிக்க முயன்றிருக்கிறார்கள்.

இந்த ஈக்கள் நெருப்பு எறும்பு களை கண்டுபிடித்து அதன் தலைமீது முட்டைகள் இடு கிறது. அந்த முட்டைகள் குஞ்சு பொறித்தவுடன் நெருப்பு எறும்பின் மூளையை தின்று தான் உயிர் வாழும். இதன்மூலம் நெருப்பு எறும்புகளை இந்த ஈ பட்டாளம் அழித்துவிடும். இந்த நச்சு எறும்புகள் பிரேசில் அர்ஜென்டைனா நாடுகளில் இருந்து 40 ஆண்டுகளுக்குமுன் அமெரிக்காவுக்கு பரவியது ஆகும்.

Scanned by CamScanner

ராணி காமிக்ஸ்–237
(மாதம் இருமுறை இதழ்)

மே 1–15
1994

லேடி ஜேம்ஸ்பாண்டு

**மாடஸ்தி**

தோன்றும்

# கொலை மிரட்டல்

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

நீ, கிரோலி, ரோசி மூவரும் உயிரோடு திரும்ப வேண்டுமானால் வில்லியிடம் சொல்லி அவற்றை இங்கே கொண்டு வரச்சொல்!
இன்னும் சிறிது நேரத்தில் வில்லி வயர்லெசில் பேசுவான்! அவனிடம் எடுத்து, வாச்சொல்!
அது எப்படி வயர்லெசில் வில்லி தொடர்பு கொள்ளுவாள்!
வில்லியுடன் ஜெசி என்று ஒரு பெண் இருக்கிறாளே அவள் எங்கள் கைஆள்தான் அவளே அதற்கு ஏற்பாடு செய்வாள்!
பிளாட்டோ வயர்லெசில் தொடர்பு கொண்டான்.
அலோ! ஜெசி! அலோ ஜெசி!
டிவோனில்
அலோ ஜெசி! உனக்கு வேலை வந்துவிட்டது!
ஓ.கே. சார்!
வில்லி! எழுந்திருங்கள்! மாடஸ்தி உங்களுடன் பேச வேண்டுமாம்!
ஏதும் அவசரச் செய்தியா?
அப்போது வில்லி தூங்கிக்கொண்டிருந்தார்.

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner






Scanned by CamScanner

Scanned by CamScanner


அதாவது அவளை அடைய விருப்பப் படுகிறாய்?
சரியாகச் சொன்னாய் மாடஸ்தி

கிழட்டு நாயே! உன்னை சும்மா விடக்கூடாது!
ஆனால் பெண்களுக்கு உன்னை பிடிக்காதே

உனக்கோ வயதாகிவிட்டது! உன்னால் என்ன செய்ய முடியும்!
ஏய்...! மாடஸ்கி!

அடிமை நாயே! வாயை மூடு!
பளார்...!
பிளாட்டோ! இவளை பேசவிட்டதே தப்பு! பார்த்தாயா என்ன சொல்கிறாள்?

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

நண்பர்கள நாம் கூட்டமாக அமர்ந்து எப்படிச் செயல்படுவது என்று பேசவேண்டும்!
வில்லி எப்படி ஒரு பெண்ணிடம் மாட்டிக்கொண்டார்! ஆச்சரியமாக இருக்கிறதே!
ஓட்டலில் வில்லியும் ஜெசியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.
ஜெசி! நாம் அறைக்கு நடந்தே போவோமா!
9 மணிக்கு எனக்கு தகவல் வரும். அதற்குள் சென்று விடவேண்டும்!
நமக்காக அவர்கள் இரண்டு மணி நேரம் காத்திருக்கட்டுமே!
அதனால் 11 மணிக்கு எப்படியும் திரும்பி விடலாம்!
ஓ.கே! காத் திருக்கட்டும்

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

வில்லி னியாகவா போகிறாய்?
வில்லியும், மாடஸ்தியும் எப்பொழுதும் வேறு யாரையும் அழைத்துக் கொள்வதில்லை!
மாடஸ்திதான் லேடி ஜேம்ஸ் பாண்டாச்சே!
அவரிடம் மாட்டிக் கொண்டவர்கள் தப்பிக்கவே முடியாது!
வில்லி தீவில் உள்ள செங்குத்து மலை அடிவாரத்துக்கு வந்திருந்தார்.
படகே இல்லை! மலைப்பாதையும் செங்குத்தாக இருக்கிறது! வழிநெடுக அலாரம் வேறு இருக்கிறது என்று மாடஸ்தி சொல்லியிருக்கிறாள்!
ரை மணிக்குப் பிறகு வில்லி சங்குத்து மலைப்பாதை வழியாக மலே வந்தார்.
மாடஸ்தி சொன்னது போலவே காவல் ருக்கிறது! என் வேலையை நாடங்கவேண்டியதுதான்!
மாடஸ்தியின் அறையில்-
நேரம் வந்துவிட்டது! வில்லி இந்நேரத்திற்கு மடத்துக்குள் நுழைந்திருப்பார்!

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

மாடஸ்தி ரோசியை விடுவித்தாள். இரோலியும், ரோசியும் அன்புடன் தழுவிக்கொண்டார்கள்.
அதற்கெல்லாம் இப்பொழுது நேரமில்லை.!
அப்பா! என்னை நம்புங்கள். நான் நிரபராதி!
இரோலி! நான் முன்னே செல்கிறேன்! நீங்கள் பின்னே வாருங்கள்!
ஓ.கே. மாடஸ்தி!
மூவரும் வெளியே வந்து ஒரு திருப்பத்தில் திரும்பியபோது— அங்கே மதகுரு நிக்கோ நின்று கொண்டிருந்தார்
நிக்கோ! இங்கே என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்.
பார்த்தீர்களா மாடஸ்தி! என்னை விட்டு விட்டு வந்து விட்டீர்கள்!
மாடஸ்தி! பிரிட்டோவிடம் இருந்து முதலில் தப்பிக்க வேண்டும்!
அவனையும் ஒரு கை பார்த்து விட்லாம்!

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

Scanned by CamScanner

அதற்குள் வில்லியும், மாடஸ்தியும் சந்தித்துக்கொண்டார்கள்.
அலோ மாடஸ்தி! மேற்குப் பக்கத்தில் படகு தயாராக இருக்கிறது. அவர்களை படகுக்கு போகச் சொல்!
ஓ.கே. வில்லி!
கிரோவி! நீங்கள் ரோசியையும், நிக்கோவையும் அழைத்துக்கொண்டு கயிறு வழியாக கீழே இறங்கி படகுக்குச் செல்லுங்கள். 10 நிமிடத்தில் நாங்கள் வருகிறோம்!
ஓ.கே. மாடஸ்தி!
வில்லி! சொன்னபடி சரியான நேரத்துக்கு வந்துவிட்டீர்களே!
வில்லி! நீங்கள் அந்தப் பெண்ணிடம் இருந்து எப்படி நழுவி வந்தீர்கள்!

என் நண்பர்கள் முலமாக ஒரு நாடகமாடினேன். அவர்கள் இப்போது கடற்கரையில் மீன்பிடி படகுடன் நமக்காக காத்திருப்பார்கள்!
அதேநேரம் மடத்தில்— கெலிகாப்டர் தயாராக இருந்தது.
நாம் கெலிகாப்டரில் சென்று அவர்களை மடக்கலாம்!
மாடஸ்தி! அவர்கள் சுடுவதை நிறுத்தி விட்டார்கள். வேறுவழியில் தாக்குதல் நடத்த திட்டம் போடுகிறார்களா?
இருக்கலாம் வில்லி! ஒருவேளை பிளாட்டோ கெலிகாப்டர் முலமாக நம்மை தேடலாம்.
ம் விரைவாக நடங்கள்!
இது என்னவோ எனக்கு சரியாகப் படவில்லை!

அதற்குள் கிரோலி, ரோசி, நிக் மூவரும் செங்குத்து மலைப்பாதையில் இறங்கி படகுக்கு வந்தார்கள்.
வில்லியும் மாடஸ்தியும் இப்படித்தானே வருவார்கள்!
ஆமாம்! அவர்களை இன்னும் காணவில்லையே?
இப்பொழுது வந்துவிடுவார்கள்!
அடுத்த நிமிடம், வில்லியும் மாடஸ்தியும் கயிறு வழியாக சரசரவென்று இறங்கிக் கொண்டிருந்தார்கள்.
வில்லி! இது உங்கள் ஏற்பாடா? அபாரம் போங்கள்!
அடுத்த 5 நிமிடத்தில் அனைவரும் படகில் ஏறி விரைந்தார்கள்.
மாடஸ்தி! யார் இந்த மதகுரு!
இவர்தான் எனக்கு பல வழிகளில் உதவி யிருக்கிறார்!
அதோ அந்தப் மீன்பிடி படகில்தான் என் நண்பர்கள் நமக்காக காத்திருக்கிறார்கள்! அதோ சிக்னல் கொடுக்கிறார்கள் பார்!

Scanned by CamScanner

Scanned by CamScanner

# நீலமலை இளவரசி

அருண்

## 3

**முன்கதை சுருக்கம்:**

*நீலமலை என்ற நாட்டை குமணன் என்ற மன்னன் ஆண்டு வந்தான். அவனுடைய ஒரே மகள், எழினி. அவள் அழகும் வீரமும் நிறைந்தவள். நாட்டுக்குள் வந்து மக்களைத் தாக்கிய காட்டுப்புலி ஒன்றை வேட்டையாட எழினி சென்றாள். புலி காட்டுக்குள் ஓட, இளவரசியும் காட்டுக்குள் புகுந்தாள்.*

அது ஒரு பயங்கரமான காடு. ஆனால், இளவரசி எழினிக்குப் பழக்கப்பட்டது. அவள் அடிக்கடி வேட்டைக்கு வந்திருக்கிறாள்.

செடி கொடிகள் அடர்த்தியாக இருந்தன. மரங்கள் உருண்டு திரண்டு உயரமாக நின்றன. வெளிச்சமும் அதிகம் இல்லை. எனவே, குதிரையை வேகமாக ஓட்டிப் போக முடியவில்லை.

இளவரசியின் பின்னேயே வேட்டைக்காரர்களும் வந்தார்கள்.

வேட்டை நாய்கள் முன்னே ஓடின.

நாய்கள் போன வழியே இளவரசி குதிரையைச் செலுத்தினாள்.

புலியைக் காணவில்லை. எந்தத் திசையில் சென்றது என்பதும் தெரியவில்லை. ஆனால், நாய்கள் மோப்பம் பிடித்துக்கொண்டே ஓடின.

வழிநெடுகப் புதர்கள். புலி ஏதாவது புதருக்குள்

Scanned by CamScanner

பதுங்கிக்கொள்ளவும் கூடும். எனவே, தாரை தப்பட்டைகளை முழங்கிக்கொண்டே சென்றார்கள்.

காட்டுக்குள் வெகுதூரம் சென்றுவிட்டார்கள்.

ஆட்கள் செல்ல முடியாத அளவுக்கு செடி கொடிகள் அடர்ந்து இருந்தன.

மரங்கள் ஓங்கி வளர்ந்து இருந்ததால், காட்டுக்குள் வெளிச்சம் வரமுடியவில்லை. எங்கு பார்த்தாலும் இருள் மண்டிக் கிடந்தது.

பாம்புகள் நெளிந்து ஓடின. மலைப்பாம்புகள் மரங்களில் விழுதுகளைப் போலத் தொங்கின.

சரியான பாதை இல்லை. வெளிச்சமும் இல்லை. காடோ பயங்கரமாக இருந்தது.

"இளவரசி! நாம் திரும்பிப் போய்விடலாமா?" என்று வேட்டைக்காரர்கள் கேட்டார்கள்.

"கூடாது! புலியை வேட்டையாடாமல் திரும்பக்கூடாது" என்று இளவரசி உறுதியாகச் சொன்னாள்.

"நாட்டு மக்களைக் கொன்று, குருதி குடித்து, சுவைகண்ட புலி, இது. மீண்டும் ஊருக்குள் வரும். மக்களை அடித்து, குருதி குடிக்கும். மக்களைக் காப்பாற்ற வேண்டாமா? அதற்காகப் புலியை வேட்டையாடத்தான் வேண்டும்" என்று இளவரசி எழினி சொன்னாள்.

"ஆனால், எங்கோ பதுங்கிக்கொண்டுவிட்டது. நாமும் காட்டுக்குள் வெகுதூரம் வந்துவிட்டோம். இதற்குமேல் பாதையே இருப்பதாகத் தெரியவில்லை" என்று வீரர்கள் சொன்னார்கள்.

அப்பொழுது 'சலசல' என்று ஓசை கேட்டது.

வேகமாகத் திரும்பிப் பார்த்தார்கள்.

ஒரு புதருக்குள் இருந்து புலி வேகமாகப் பாய்ந்து ஓடிக்கொண்டிருந்தது!

"அதோ, புலி! பிடியுங்கள்!" என்று இளவரசி கூவினாள்.

வீரர்களும், வேட்டைக்காரர்களும் வேகமாக ஓடினார்கள். இளவரசியும் குதிரையைத் தட்டிவிட்டாள். நாய்களும் விரைந்தன.

வெகு தூரம் தேடிப் போனார்கள். ஆனால், புலி மீண்டும்

Scanned by CamScanner

Scanned by CamScanner

எங்கோ பதுங்கிக்கொண்டுவிட்டது!

"எல்லாரும் நில்லுங்கள்" என்று இளவரசி கட்டளையிட்டாள்.

வீரர்கள், வேட்டைக்காரர்கள் எல்லாரும் நின்றார்கள்.

"நாம் இப்படிக் கூட்டமாகப் போய்க்கொண்டிருந்து பயன் இல்லை. நேரமோ அதிகமாகிவிட்டது. இன்னும் சிறிது நேரத்தில் இருட்டிவிடும். காட்டு மிருகங்கள் எல்லாம் வெளியே கிளம்பிவிடும். அதற்குள் புலியை வேட்டையாட வேண்டும். நாம் நாலு திசையிலும் பிரிந்து போனால்தான் முடியும். புறப்படுங்கள்" என்று இளவரசி ஏவினாள்.

எல்லாரும் நாலா பக்கமும் பிரிந்து சென்றார்கள்.

இளவரசி கிழக்குப் பக்கம் சென்றாள்.

சில வீரர்களும், ஒரு நாயும் உடன் வந்தார்கள்.

நாய் முன்னே சென்றது.

இளவரசிக்குப் பாதுகாப்பாக வீரர்களும், வேட்டைக்காரர்களும் சூழ்ந்து வந்தார்கள்.

கட்டுக்குள் வெகுதூரம் சென்றுவிட்டார்கள். இளவரசி எழினி ஒருநாளும் இவ்வளவு தூரம் காட்டுக்குள் வந்தது இல்லை.

ஆள் நடமாட்டமே இல்லாத காடு. பாதை எதுவும் கிடையாது. ஒரே இருள். குடிசைக்குள் அகல்விளக்கு எரிவது போல, அங்கங்கே வெளிச்சம் திட்டுத் திட்டாக விழுந்தது.

இளவரசி! இதற்குமேல் செல்வது நல்லது அல்ல. நாட்டுக்குத் திரும்பிவிடலாம்" என்று வேட்டைக்காரர்கள் சொன்னார்கள்.

"இவ்வளவு தூரம் வந்துவிட்டு வெறுங்கையுடன் திரும்ப முடியாது" என்று இளவரசி சொல்லிவிட்டாள்.

அப்பொழுது நாய் பாய்ந்து ஓடியது!

"புலியாகத்தான் இருக்கும்! விரட்டுங்கள்" என்று இளவரசி ஏவினாள்.

வீரர்களும், வேட்டைக்காரர்களும் நாயின் பின்னே ஓடினார்கள்.

இளவரசியும் குதிரையில் சென்றுகொண்டிருந்தாள்.

Scanned by CamScanner

எதிரில் நீண்ட மலைத்தொடர். மலையிலும் அடர்ந்த மரங்கள்.

திடீர் என்று இளவரசி மீது புலி பாய்ந்தது!

குதிரையிலிருந்து இளவரசி கீழே விழுந்தாள்.

எங்கே புலி என்று தேடினாள்.

புலி மீண்டும் அவள் மீது பாய்ந்தது!

ஆனால், இளவரசி தந்திரமாக விலகிக்கொண்டாள்!

புலி மீண்டும் பாய்ந்தது!

புலியை சமாளிக்க இளவரசி தயாரானாள்!

அப்பொழுது மந்திரவாதி ஒருவன் மலைக் குகையிலிருந்து வெளியே வந்தான்.

(தொடரும்)

# விமான விபத்து!

ரஷியாவில் இருந்து ஆங்காங் நாட்டுக்கு சென்றுகொண்டிருந்த விமானம் கடந்த மாதம் சைபீரியாவின் காட்டுப் பகுதியில் விழுந்து நொறுங்கியது. இந்த விபத்தில், விமானத்தில் பயணம் செய்த 75 பயணிகள் பலியானார்கள். விமான நிறுவன அதிகாரிகள் விபத்து ஏற்பட்ட காரணத்தை கண்டறிய புலன் விசாரணை நடத்தினார்கள். இதில் ஒரு முக்கிய தகவல் கிடைத்திருக்கிறது.

விபத்துக்குள்ளான விமானத்தின் துணை பைலட் தன் 15 வயது மகனையும் விமானத்தில் அழைத்துச் சென்றிருக்கிறார். அவர் மகனை தன் கூடவே பைலட்டின் அறையிலேயே அமர வைத்திருக்கிறார். அந்தச் சிறுவனோ தவறுதலாக ஏதோ ஒரு பட்டனை அழுத்த, விமானம் தாறுமாறாக பறந்து தரையில் விழுந்து நொறுங்கி இருக்கிறது என்று விசாரணையில் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

கடந்த ஒரு ஆண்டில் மட்டும் 11 ரசிய விமானங்கள் தரையில் விழுந்து நொறுங்கியிருக்கின்றன. இந்த விபத்துக்களினால் மொத்தம் 221 பேர் உயிரை இழந்திருக்கிறார்கள்.

Scanned by CamScanner

**கண்டுபிடியுங்கள் – 74**

# ரூ. 500 பரிசு!

கீழே கொடுக்கப்பட்டுள்ள படங்களை உற்றுப் பாருங்கள். அவற்றின் பெயரில் இருந்து ஒரு எழுத்தை மட்டும் எடுத்து ஒன்றுசேருங்கள். தமிழ்நாட்டின் சுற்றுலாத்தளம் ஒன்று கிடைக்கும். அது எது? கண்டுபிடியுங்கள் பார்ப்போம்! உங்களுக்காக ரூ. 500 பரிசு காத்திருக்கிறது!

அது எது? என்பதை (பெயரை மட்டும்) ஓர் அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்புங்கள். முகவரி எழுதவேண்டிய இடத்தில், இத்துடன் உள்ள முகவரி கூப்பனை வெட்டி ஒட்ட வேண்டும்.



Scanned by CamScanner

சரியான விடை எழுதியவருக்கு ரூ. 500 பரிசு கொடுக்கப்படும்! பலபேர் சரியான விடை எழுதியிருந்தால், பரிசுக்கு உரியவர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

முடிவு தேதி: 13–5–94.

அனுப்ப வேண்டிய முகவரி:–

கண்டுபிடியுங்கள்,
"ராணி காமிக்ஸ்",
சென்னை-600 007.

கண்டுபிடியுங்கள் – 72

## பரிசு பெற்றவர்கள்:–

மார்ச் 1-ந்தேதி, வெளியான "ராணிகாமிக்ஸ்" கண்டு பிடியுங்கள் போட்டியின் விடை:– காஞ்சிபுரம்.

நூற்றுக்கணக்கானோர் சரியான விடை எழுதியிருந்ததால், பரிசுக்குரிய 25 பேரை குலுக்கல் முறையில் தேர்ந்து எடுத்தோம்.

பரிசுத்தொகை ரூ. 500, ஆளுக்கு ரூ. 20 வீதம் பிரித்துக் கொடுக்கப்பட்டது.

பரிசு பெற்றவர்கள்:–

(1) செந்தில்குமார், கட்டகரம். (2) ஆ. தீபா, சத்துவாச்சேரி. (3) வி. கணேசன், வேதாரணியம். (4) சசிகலா, சென்னை-83. (5) அப்துல்கனி, பாம்பன்.

(6) உமாமகேசுவரி, கோவில்பட்டி. (7) ப. சுகுணா, வயலூர். (8) சேகர், குளித்தலை. (9) சுமதி, ஆத்தூர். (10) ஜேம்ஸ், திங்கள்சந்தை.

(11) வி. சண்முகம், சென்னை-26. (12) ம. விமலா, இராஜபாளையம். (13) சேதுராமன், கல்விடைக்குறிச்சி. (14) உஷாராணி, புதுக்கோட்டை. (15) ஜான்சன், பரங்கிப்பேட்டை.

(16) பிரியா, கரந்தை. (17) ந. சோமசுந்தரம், முத்துப்பேட்டை. (18) உமாராணி, காரைக்குடி. (19) மாரி, புங்கமுத்தூர். (20) தெய்வானை, பனங்குடி.

(21) அ. யாகப்பன், பம்பாய்-68. (22) ஜான்சிராணி டலிமா, வடபட்டினம். (23) இராமலிங்கம், திருச்செந்தூர். (24) முகம்மது இப்ரகீம், குத்தாலம். (25) லெ. தேவி, சென்னை-15.

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாண்சுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ் சாலை, சென்னை-600 007. ஆசிரியர்: அ. மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை-600 007.

Scanned by CamScanner

அடுத்த காமிக்ஸ்

# கோடைமலர்!

முகமூடிவீரர்

**மாயாவி**

தோன்றும்

# தலைவெட்டிக் கூட்டம்

காட்டுக்குள்ளே போட்டா போட்டி!

படிக்கத் தவறாதீர்கள்!

அதிக பக்கம்!
ஆனால் அதே விலை!!

"ராணிகாமிக்ஸ்", சென்னை-600 007.

Scanned by CamScanner

RANI COMICS
TAMIL FORTNIGHTLY

237
G

Regn. No. [illegible] (N)/461
Registered as Newspaper in Sri Lanka

எப்போது பார்லே மேங்கோ பைட்
உங்களிடம் உள்ளதோ அப்போது
ராணி காமிக்ஸ் இதழின்
ஆனந்தம் மேலும் அதிகரிக்கும்

everest/93/PP/163-tm-RAN

Scanned by CamScanner